

சென்னை அண்ணா அறிவாலயத்தில், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக மருத்துவ அணி உறுப்பினர் அடையாள அட்டையை வெளியிட்டார்கள். கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தலைமைக்கழக செய்தித் தொடர்புக்குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மருத்துவ அணி மாநிலச் செயலாளர் மரு.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., மருத்துவ அணி மாநிலத் தலைவர் மரு.கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி., மருத்துவ அணி துணைச் செயலாளர் மரு. கலைக் கதிரவன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் இளைய நல்லூர் ஊராட்சி ஜங்காலப்பள்ளியில் பகுதி நேர நியாயவிலைக் கடையை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்து பொருட்கள் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, வேலூர் மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், ஊராட்சி குழுத்தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், காட்பாடி ஒன்றிய கழக செயலாளர் கே.கருணாகரன், கூட்டுறவு சங்கங்களின் இணைபதிவாளர் குணஜயப்பதுரை, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கலைவாணி, ஒன்றிய குழு உறுப்பினர்கள் சுஜாதா, கவிதா, ஊராட்சி மன்ற தலைவர் கீதாஞ்சலி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதி உறுப்பினர் நிதியில் இருந்து ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் மின் நூலகத்தினை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் 23.12.24 அன்று துவக்கி வைத்து ஓலைச்சுவடிகளை பார்வையிட்டனர். உடன் மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப.கார்த்திகேயன், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், மேயர் ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் சுகபுத்ரா, துணை மேயர் ராஜ் உள்பட பலர் உள்ளனர்.

### சென்னை – லஸ் சர்ச் சாலையில் போக்குவரத்துத் தீவு!

# "இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர் போக்குவரத்துத் தீவு" என பெயர்ப்பலகை!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

சென்னை, டிச. 27 -

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, லஸ் சர்ச் சாலையில் உள்ள போக்குவரத்துத் தீவிற்கு புதிதாக பெயர் சூட்டப்பட்ட "இயக்குநர் சிகரம் கே. பாலசந்தர் போக்குவரத்துத் தீவு" பெயர்ப்பலகையினை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று திறந்து வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு123, லஸ் சர்ச் சாலை, காவேரி மருத்துவமனை அருகில் உள்ள போக்குவரத்துத் தீவிற்கு (Traffic Island) "இயக்குநர் சிகரம் கே. பாலசந்தர் போக்குவரத்துத் தீவு" என்கிற பெயர் சூட்டி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, லஸ் சர்ச் சாலை போக்குவரத்துத் தீவில் நேற்று (26.12.2024) நடைபெற்ற விழாவில், புதிதாக பெயர் சூட்டப்பட்ட "இயக்குநர் சிகரம் கே. பாலசந்தர் போக்குவரத்துத் தீவு" பெயர்ப்பலகையினை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர். பிரியா, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ். முருகன், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் திருமதி மோ.சரஸ்வதி, இயக்குநர் சிகரம் கே. பாலசந்தர் அவர்களின் மகள் திருமதி புஷ்பா கந்தசாமி மற்றும் குடும்பத்தினர், ரசிகர்கள் சங்க நிர்வாகிகள் நடிகர் ராஜேஷ், வி.பாபு, முகமது இலியாஸ், நடிகர் கலைமாமணி பூவிலங்கு மோகன், நடிகர் தசரதி, ஒளிப்பதிவாளர் விக்ரமன், தமிழ்நாடு இயக்குநர் சங்கப் பொதுச் செயலாளர்/இயக்குநர் ம.பேரரசு, பொருளாளர் சரண், தமிழ்நாடு சின்னத்திரை இயக்குநர்கள் சங்கம்/தமிழ்நாடு சின்னத்திரை கலைஞர்கள் கூட்டமைப்பு சங்கத் தலைவர் மங்கை அரிராஜன், சின்னத்திரை நடிகர் சங்கத் தலைவர் சிவன் சீனிவாசன், திரையுலகப் பிரமுகர்கள்/நடிகர்கள் எஸ்.வி.சேகர், பிரமிட் நடராஜன், அழகு, டி.வி. வரதராஜன், நாகேஷ் ஆனந்த்பாபு, நடிகை காயத்ரி ரகுராம், திரைப்பட இயக்குநர்கள் வசந்த், நாகா, கலை இயக்குநர் சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

